அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோவை-18

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

தமிழ் - தாள் - ௨

(விழுமியம் - செய்யுள், உரைநடை - மொழித்திறன் - படைப்பாற்றல்)

அலகு: I செய்யுள்

1. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர்
(சிற்றில் பருவம், வருகைப் பருவம், செங்கீரைப் பருவம், அம்புலிப் பருவம்)

2. பராபரக்கண்ணி - தாயுமானவர் (10 பாடல்கள்)

3. தேம்பாவணி - வீரமாமுனிவர் (மகன் நேர்ந்த படலம்) (1-19 பாடல்கள்)

4. உமர்கய்யாம் பாடல்கள் - (47, 57, 58, 60, 74, 85, 111, 112, 113, 114)

5. குற்றாலக்குறவஞ்சி - திரிகூடராசப்பக் கவிராயர் (குற்றாலநாதர் உலா வருதல், வசந்தவல்லி பந்தாடல்)

அலகு - II

செய்யுள்

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர்
(சிற்றில் பருவம், வருகைப்பருவம், செங்கீரைப் பருவம்
அம்புலிப்பருவம்)

குமரகுருபரர் :

* பாண்டிய நாட்டின் ஸ்ரீவைகுண்டத்தில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர்

* குமரகுருபரரின் பெற்றோர் சிகாமணிக் கவிராயர், சிவகாம அம்மையார் ஆவர்

* ஐந்தாண்டுகள் பேசாதிருந்ததைக் கண்ட பெற்றோர் திருச்செந்தூர் முருகனை வேண்ட இறையருளால் ஊமை நீங்கி 'கலி வெண்பா' எனும் பாடலை பெருமான் மீது பாடினார்.

* முருகக் கடவுள் கனவில் தோன்றி 'நீ குருபரனாக' என்றருளியதால் அன்று முதல் குமரகுருபரர் என அழைக்கப்பட்டார்.

* மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மையிரட்டை மணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதி நெறி விளக்கம் என்பவற்றை மீனாட்சியம்மை மீது இயற்றியுள்ளார்.

* திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிதம்பர மும்மணிக் கோவை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

பிள்ளைத்தமிழ் :

தெய்வத்தையோ அரசனையோ, சான்றோரையோ குழந்தையாக பாவித்து பாடப்படும் சிற்றிலக்கியம் பிள்ளைத்தமிழ் இதைப்பாடியவர் குமரகுருபரர். வைத்தீஸ்வரன் கோயில் என்று வழங்கப்பெறும் ஊரின் பழைய பெயர் புள்ளிருக்குவேளூர் என்பதாகும். சம்பாதி, சடாயு, இருக்கு வேதம், முருகக் கடவுள் சூரியன் ஆகியோர் பாரானை வழிபட்ட தலமே புள்ளிருக்குவேளூர்.

இங்குள்ள சிவன் கோயிலில் முத்துக்குமாரசாமி சந்நதியுள்ளது. குமரகுருபரர் இம்முத்துக்குமாரசாமியின் பெருமைகளை முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் விளக்கக் கூறியுள்ளார்

**சிற்றிற்பருவம்:**

ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய இப்பருவம், பெண்பிள்ளைகள் மணலால் வீடுகட்டி விளையாடும்போது ஆண் குழந்தை அதனைச் சிதைத்து அழிக்கும் எம் சிற்றிலைச் சிதைக்காதே என இரைஞ்சுவதாக அமைவது சிற்றில் பருவம்.

**பாடல் - விளக்கம்:**

நாங்கள் கட்டியுள்ள சிறிய மணல்வீடு வழியினை வீட்டுத் தெரு ஓரமாகத்தான் கட்டியுள்ளோம். அசுரர் தலைவன் சூரபதுமன் வானுலகைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்து கடலின் நடுவினில் கட்டியதனைப் போன்ற மிகப்பெரிய நகரம் போன்று இருக்காது. இருக்கு என்ற மறையின் பெயரினைக் கொண்ட இரைஞ்ச மனையினைப் போன்று பெரியது அன்று, காவிரி பாய்கின்ற சோலைகள் மலர்ந்துள்ள அழகான நாட்டின் தலைவனே, புள்ளிருக்குவேளூர் என்ற தலத்தினில் எழுந்தருளியுள்ள முத்துக்குமரப்பெருமானே சிரமப்பட்டுக் கட்டியதான இச்சிறிய வீட்டினை அழித்து விடாதீர்கள்.

**வருகைப்பருவம்:**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் இது ஆறாவது பருவம். குழந்தை தளிர்நடையிட்டு நடைபயிலத் தொடங்கும். இக்காலத்தில் தாய் உள்ளிட்டவர்கள் குழந்தையின் பெருமைகளை சொல்லி அருகில் வருமாறு அழைத்து மகிழும் பருவமாகும்.

பாடல் விளக்கம்:

இளமைத் தன்மையுடையவனான குமரனின் வாயினின்றும் ஊறிவரும் பசிய தேனமுதமானது சுரந்து தாயான பார்வதியின் வயிறு குளிர்ச்சியினை அடைந்திடும்படியாக அவள் மீது ஏறி, பின்னர், தந்தையுமான சிவபெருமானின் மார்பின் மீதும் ஏறிக் குறைவுக் கூத்துக்களை நிகழ்த்தி, அவன் கையினில் உள்ள மழுவினைத் தட்டி சிறிய ஒலியினை உண்டாக்கி கையில் உள்ள நெருப்பினை அவன் தலை கங்கைச்சடையில் உள்ள கங்கை நீரினைக் கொண்டு அணைத்து. பிறை நிலவினைப் பாம்பின் வாயினில் போட்டு, மான் கன்றினுடைய பசிக்கு அருகம் புல்லை உணவாகக் கொடுத்து, அழகான சிவந்த உடலில் வெண்ணீற்றின் தூசுகள் படும்படியாகவும், தூசியில் விளையாடி காடு போன்ற சடைமுடியினில் விளையாடியதால் உன்னுடைய கண்கள் சிவந்திடும்படியாகவும். முருகனையான மகிழ்ச்சியுடன் உன்னுடைய குழந்தைப் பருவத்தில் விளையாடிச் செய்த குறும்புகளை உடையவனே, கந்தபுரியில் வாழ்கின்ற குமரகுருபரனே அழகு வடிவாக மெல்ல மெல்ல அசைந்திடும் படியதான நடையினில் நடந்து வருக! வருகவே!

செங்கீரைப் பருவம்

இது பிள்ளைத்தமிழ் பருவம் ஆகும். குழந்தையானது ஒருகாலை மடக்கி, ஒரு காலை நீட்டி, இரண்டு கைகளையும் நிலத்தினில் ஊன்றித் தலைநிமிர்த்தி, முகத்தினை அசைத்து ஆட்டும், இந்நிகழ்வு குழந்தையின் ஐந்தாம் மாதத்தில் நடைபெறும்.

பாடல் விளக்கம்:

பாதங்களில் செம்பொன்னால் செய்யப்பட்ட சிறிய கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடவும் இடையால் அரைநாணுடன் மணிகளும் சிறியதொந்தியுடன் தொடிய வயிறு சரிந்து ஆடவும், நெற்றியில் வட்டச்சுட்டியும், தும்பி போன்ற குண்டலங்களும் குழைகளும் காதுகளில் ஆடவும். உச்சிக் கொண்டை முடிகளுடன் சேர்த்துக் கட்டப்பட்ட முத்துக்கள் ஆடவும். அழகிய பவளம் போன்ற மேனியும் ஆடிடும் படியாகச் செங்கீரையாடி அருளே. வைத்தியநாதபுரியதில் எழுந்தருளியுள்ளவனான முத்துக்குமரப்பெருமானே, செங்கீரை ஆடியருளே.

அம்புலிப்பருவம்:

இது ஏழாவது பருவம். பாட்டுடைத்தலைவன் அல்லது தலைவியான குழந்தையுடன் சேர்ந்து விளையாட வருமாறு நிலவினைக் குழந்தையின் பெருமைகளைச் சொல்லி அழைப்பதாகும். இப்பருவத்தில் சாம, தான, பேத, தண்டம் என்கிற முறையினில் பாடுவதாகப் பாடல்கள் அமைந்திருக்கும்.

பாடல்விளக்கம்:

பிறவிக்கடலினில் தள்ளப்பட்டு வருந்திக் கொண்டிருக்கும் என்னை மோட்சம் என்ற கரையினில் கொண்டு சேர்த்தான். அவன் முருகன் உனக்கும் அருள் செய்திட நினைத்து, இங்கே வருவாயாக என்று அழைத்தான். ஆனால் நீயோ வரவில்லை. நீ வராமல் தாமதம் செய்து கொண்டிருந்தால் கண்கள் சிவந்திடும் முருகப்பெருமான் அருகிருவான். அருகின்ற நிலையினை, பானுகோபனைக் கொன்றவனான வீரபாகு பொறுத்துக் கொள்ள மாட்டான். கடைசியாக சிறுவர்கள் காவிரியாற்று நீர்த்துறையினில், முத்துக்கள் நிறைந்த மணல்மேடுகளின்மீது வெறி முழுநிலவு எனும் கலசத்தின் அமுதத்தினை அள்ளுவார்கள்.

வளங்கள் நிறைந்த சோணாட்டில் எழுந்தருளியுள்ள இந்த முத்துக்குமரனுடன் அம்புலியே நீ ஆட வந்திடுக.

வினாக்கள்

ஓரிருவரிகளில் விடையளி

1. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழின் ஆசிரியர் பெயர் என்ன?
2. சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று?
3. குமரகுருபரரின் பெற்றோர் பெயர்?
4. குமரகுருபரர் ஊமைநீங்கி பாடிய முதல் பாடல் எது?

குறு வினாக்கள்:

5. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் யாவை?
6. அம்புலிப் பருவம் என்றால் என்ன?
7. முருகன் அருள் பெற்று குமரகுருபரரான நிலையை எடுத்துரைக்க.

விரிவான விடையளி

8. குமரகுருபரர் சிறுகுறிப்பு வரைக
9. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் நூற்குறிப்பு தருக.
10. அம்புலிப்பருவ நிகழ்வுகளை எடுத்துரைக்க

கட்டுரை வினா:

11. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழில் இடம்பெற்றுள்ள கருத்துகளை நம் பாடப்பகுதி கொண்டு தொகுத்துரைக்க.

# பராபரக்கண்ணி - தாயுமானவர் பாடல்கள்

## தாயுமானவர்:

திருமறைக்காடரல் சைவ வேளாளர் குலத்தில் கேடிலியப்பப் பிள்ளைக்கும் கெசவல்லி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர். திருச்சிராப்பள்ளி விஜயரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் அமைச்சராக இருந்தவர். வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர். பதவியைத் துறந்து துறவியானவர். சமரச சன்மார்க்கத்தை முதன்முதலாக உலகிற்கு உணர்த்தியவர் தாயுமானவர். சைவசித்தாந்தம் அத்வைதம் இரண்டையும் நன்கு உணர்ந்தவர்.

## பராபரக்கண்ணி பொருள்விளக்கம்.

பராபரத்தைப்பற்றிய கண்ணி எனப் பொருள்படும். பரம் + அபரம் = பராபரம், மேலானதும் கீழானதும் எங்கும் எவற்றிலும் கலந்துள்ள மேலான இறைவன் என்பது பொருள். கண்ணி - ஈரடியால் ஒரே எதுகையால் அமைவது. வெண்டளை பிறழாமல் வரும். இதனைக் குறள்வெண்செந்துறை என்பர். இதில் உள்ள கண்ணிகள் மொத்தம் முந்நூற்று எண்பத்தொன்பது.

## பாடல் விளக்கம்.

1. சிறந்த தெய்வத்தன்மை பொருந்திய திருவருள்வெளி முதலாக நிலம் வரை உள்ள அனைத்தையும் ஆட்சிசெய்யும் தலைவனே! மேலான தனி முதற் பொருளே, பராபரமே.

2. தெவிட்டாத அமுதமே! அரசனே! பேரின்பவெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் நதியே! மௌனக்கடலே! பராபரமே

3. எல்லாத் திசைகளும் தானாக நின்று, என் இதயத்தில் ஊறித் தித்திக்கும் பேரின்பத் தேனே!

4. முத்தே! பவளமே! [illegible] பசுமை சூழ்ந்த அழகிய ஒளியே! பேரறிவே! என் உள்ளத்துத் தெளிவே.

5. நின்னிடத்தில் அன்பு பெருகுமாறு செய்து, எனது அரிய உயிரைக் காப்பாற்ற வந்த இன்ப வெள்ளமே கடவுளே!

6. சித்தத்தில் தோன்றும் எண்ணமும், செய்கின்ற செயலும் என அனைத்தும் நீயே என வாழ்கின்ற ஞானியர்க்கு உறவாய் விளங்குபவனே.

7. அப்பா! வறுமைக் காலத்தில் உதவ சேமித்து வைத்த பொருளே! பொறுக்க முடியாதவனாய் இருக்கிறேன்! போற்றி என்று சொல்வதைத் தவிர, வேறு என்னால் என்ன செய்ய முடியும்.

8. என் முகத்தை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாயோ? ஒருமுறையேனும் பார்த்து என் கவலை களைந்திருக்க -மாட்டாயோ? வாய்திறந்து விடை கூறுவாயாக!

9. என் மீது அருள் பொழியும் என் தந்தையே! தன் கன்றுக்காக இரங்கும் தாய்ப்பசு போல் எனக்கு எப்போது இரக்கம் காட்டுவாய்?

10. நன்மை தீமையை வேறுபடுத்திக் காண அறியேன். நான் என்று நின்றவன் யார் என்றும் அறியேன். நான் அறிவிலியாய் இருப்பதும் ஏனோ?

## வினாக்கள்:

1. தாயுமானவர் பெற்றோர் பெயர் என்ன?
2. பராபரக்கண்ணியின் ஆசிரியர் பெயர்?
3. தாயுமானவர் யாரிடம் அமைச்சராக இருந்தவர்.
4. சமரச சன்மார்க்கத்தை முதன்முதலாக உலகிற்கு உரைத்தவர்.

## சிறுவினா விடையளி

5. தாயுமானவர் குறிப்பு வரைக.
6. பராபரக்கண்ணி நூல்குறிப்பு தருக.

## கட்டுரை வினா.

7. பராபரக்கண்ணியில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.